ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2460/ 49 - 2025 නොවැම්බර් මස 01 වැනි සෙනසුරාදා - 2025.11.01
2460/49 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2012, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 1789/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 315 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட, 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/LRB/11.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.:
WGDWD&EIP/ACQ/MH/01.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 26.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 526 B, கங்கொடவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கங்கொடவில (மஹரகம நகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.02.18 ஆந் திகதிய, CO/DSO/2018/473 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு "AS" – வரி மதிப்பீட்டு இல. 10/13 (ஒரு பகுதி) பழைய கெஸ்பேவ வீதி - விஸ்தீரணம்: 0.0018 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு AU மற்றும் ஆ.வ.கொ 9591 இல் துண்டு இல. 64, இந்த வரைபடத்தில் துண்டு AT, AR மற்றும் AQ ; கிழக்கு: துண்டு AQ, பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 10/13 A மற்றும் 10/13 ஐ கொண்ட காணி ; தெற்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 10/13 A மற்றும் 10/13 ஐ கொண்ட காணி, அகழி மற்றும் துண்டு AV ; மேற்கு: துண்டு AV, AW மற்றும் AU, ஆ.வ.கொ 9591 இல் துண்டு இல. 64 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு AT.

EOG 11 - 0014

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2016, நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1994/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 284 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட, 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/7/2016/HW/281.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: 3/2/3/10/267
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 11.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 328 A, தல்கஸ்மோட்டே கிராம அலுவலர்பிரிவில்தல்கஸ்மோட்டேகிராமத்தில்அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 510610, தொகுதி இல. 03, தாள் இல. 04, 2022.04.22 ஆந் திகதிய, கடத்திறள் வரைபடத்தின் படி (ගම/අත්/2016/343, 2016.05.26 ஆந் திகதிய முதற் சுவட்டு வரைபடத்தில் G117, G119 துண்டுகள்) பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு இல. 652 – கோன்கஹவத்தை - விஸ்தீரணம்: 0.0169 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 312 மற்றும் 646 ; கிழக்கு: துண்டு இல. 647, 651, 653, 651 மற்றும் 654 ; தெற்கு: துண்டு இல. 651, 653, 654 மற்றும் 658 ; மேற்கு: துண்டு இல. 658 மற்றும் 312.

02. **துண்டு இல. 654 – கோன்கஹவத்தை - விஸ்தீரணம்: 0.0019 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 652 மற்றும் 651 ; கிழக்கு: துண்டு இல. 653 ; தெற்கு: துண்டு இல. 653, 657 மற்றும் 658 ; மேற்கு: துண்டு இல. 658 மற்றும் 652.

EOG 11 - 0015

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.